www.tamilarangam.net

# ரூபன் படுகொலை! புலிகளின் வெறியாட்டம்!



தயாநிதி (ரூபன்)
கப்புது,
நெல்லியடி.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமது சொந்த இயக்கத் தோழர்களை சித்திரவதை செய்து கொலைசெய்து மகிழ்வதும், சகஇயக்கத் தோழர்களை புதைகுழிக்கு அனுப்புவதும் சாதாரண விடயங்களாகிவிட்டன. நெருக்கடியான இக்காலகட்டத்தில் கூட இக்கொலைகள் தொடர்கின்றன. பிரச்சாரப் பிரிவுகளின் கொள்கை விளக்கங்கள், தத்துவப் பேராசிரியர்களின் நியாயப்படுத்தல்கள், புரட்சிகரப் பேட்டிகள் எல்லாவற்றையும் மீறி, இவர்களது முகத்திரைகள் கிழிந்து கோர முகங்கள் அடிக்கடி வெளியே தெரிகின்றன. இவ்வியக்கங்களின் பாசிசத் தலைமைகளைத் தோழர்கள் விமர்சிக்கும் பொழுது, அவ்விமர்சனங்களைச் சந்திக்கத் துணிவற்ற இக்கோழைகள் சிங்கள இராணுவத்தை விடக் கேவலமான முறையில் தோழர்களைச் சித்திரவதைக்குள்ளாக்கி, சமாதி கட்டுகின்றனர். **இந்த மனிதவிரோத பாரம்பரியத்தின் ஆரம்பகர்த்தாக்களான தமிழீழ விடுதலைப் புலிகள்,** அண்மையில் மற்றுமொரு போராளியைச் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொலை செய்து அப்பாரம்பரியத்தை மிகுந்த ஆர்வத்துடன் மீண்டும் உறுதி செய்திருக்கிறார்கள்.

## ரூபன் கடத்தப்பட்டுக் கொலை

**10-7-85 புதன்கிழமை, மாலை 3-30 மணியளவில் கப்புது, நெல்லியடியைச் சேர்ந்த ரூபன் எனப்படும் தயாநிதி என்பவரைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் (L.T.T.E.) வேதாரண்யத்தில் வைத்து இரும்புக்கம்பிகளால் தாக்கி, தமது வானில் ஏற்றி, கொலைக்களம் கொண்டு சென்றுள்ளனர்.**
ரூபன், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நான்கு வருடங்களாக உதவி வந்தவர். நெல்லியடியில் இவ்வியக்கம் நன்மதிப்புப் பெற பிரச்சார வேலைகளில் கடுமையாக உழைத்தவர். அக்கிராமத்திலிருந்து பல போராளிகள் விடுதலைப்புலி இயக்கத்தில் சேரக் காரணமாகவிருந்தவர். 1983-ம் ஆண்டு இயக்கத்தின் முழுநேர உறுப்பினராகி, பயிற்சிக்காக இந்தியா வந்தார். இயக்கத்தின் கொள்கை விளக்கங்கள், பிரசுரங்கள் பேட்டிகளுக்கும் அதன் நடைமுறைக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது எனப் படிப்படியாகக் கண்டு கொண்டார். மக்களின் உண்மையான விடுதலையை நேசித்த இவருக்கு இயக்கத் தலைமையின் சர்வாதிகாரப் போக்கும், டாம்பீக வாழ்க்கையும் அதிருப்தியைக் கொடுத்தன. இயக்கத்திற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த நீண்டகால உறுப்பினர்களின் வெளியேற்றம்; இயக்கத் தலைவர் தமது உறவினர்கள், நண்பர்கள், எடுபிடிகள் கொண்ட குண்டர் படையையும் உளவுப்படையையும் வைத்திருத்தல்; போலியாகப் பிரசுரங்களில் மாத்திரம் மத்திய குழுவினால் வெளியிடப்பட்டது என அச்சேற்றிவிட்டு, தலைமையும் அதன் எடுபிடிகளும் சகல அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு துஷ்பிரயோகம் செய்தல்; விமர்சனம் செய்பவர்களைக் கொலைசெய்தல்; ஆகிய இன்னும் பல ஜனநாயகவிரோத, பாசிச போக்குகளைக்கண்டு அதிருப்தி கொண்டார் இவர். ரூபன் இருந்த முகாமில் அவரும், அவரையொத்த கருத்துடைய தோழர்களும் இயக்கத்தின் தவறான போக்குகளை விமர்சித்தனர். முகாமில் இருந்த போராளிகள் உண்மை நிலைமையை உணர்ந்தமையால் இவரிருந்த முகாம் ஆட்டங்காணத் தொடங்கியது. இவர்களின் விமர்சனங்களுக்குத் தலைமை பதிலளிக்கத் தவறியது. ஆனால் இவர்களின் கேள்விகள், விமர்சனங்கள் நியாயமானவையே என்ற உணர்வு முகாமினுள் பரவலாகக் காணப்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டது. இவ்விமர்சனங்கள் காரணமாக ரூபனுடன் சேர்த்துப் பதினாறு தோழர்கள் அடையாளங் காணப்பட்டனர். இவர்களைக் கொலை செய்தால் முகாமிலுள்ளவர்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்ற காரணத்தால் இவர்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். ஆனால் வெளியேறிய நாளிலிருந்து இவர்களனைவரும் புலிகளின் உளவுப் படையினரால் துரத்தப்பட்டுக் கொண்டே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் வெளியே வந்து தங்கள் அன்றாட வாழ்வுக்கே அவலப்பட்டு, சிங்கள இராணுவத்தினருக்கும் அதே நேரத்தில் புலிகளுக்குமிடையில் அகப்பட்டு, ஈழத்திற்கும் திரும்பிப் போக முடியாமல், இந்தியாவிலும் பகிரங்கமாக வாழ முடியாமல் ஒளிந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவ்வாறான நிலையில், ரூபன் பலரிடம் கடன்பட்டுத் தன்னுடன் வெளியேறிய தோழர்களின் உணவுக்கும், உறைவிடத்துக்கும் ஏற்பாடு செய்தார். இவரது உறவினர்கள் மீண்டும் கல்வியைத் தொடரும்படி நுழைவுச் சீட்டு எடுத்துக் கொடுத்து நிர்ப்பந்தித்த போதிலும், தனிமனிதனாகவேனும் விடுதலைக்கு ஏதாவதொரு பங்களிப்பைச் செய்யவேண்டுமென எண்ணி, திருச்சியிலுள்ள ஓர் ஆச்சிரமத்தில் தன்னை இணைத்துக்கொண்டு இந்தியக் கரையடைந்த தமிழ் அகதிகளுக்கு தொண்டாற்றினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலைவெறி நடவடிக்கைகளுக்கு எந்தவிதத்திலும் குறைவின்றிச் சாதனைகள் பல புரிந்த மற்றைய **'பெரிய' இயக்கங்களிலும்** சேர்ந்து இயங்க ரூபன் விரும்பவில்லை. 8-7-85 அன்று அகதிகளுக்காக வந்த பொருள்களை எடுத்து வருவதற்காக, ஆச்சிரமத்திலிருந்த இன்னொரு இளைஞருடன் வேதாரண்யம் சென்றார். தான் இயக்கத்திலிருந்து வெளியேறி வேறோர் இயக்கத்திலும் சேரவில்லை என்றபடியால் தன்னைப் புலிகள் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆனால் அது தவறானது. ரூபன் 10-7-85 அன்று வேதாரண்யத்தில் புலிகளின் வீட்டுக்கருகாமையால் சென்றபொழுது (முதல் நாளும் அதே வழியால் சென்றபொழுது அவர்கள் அவரை ஒன்றும் செய்யவில்லை) 'பொட்டு' என்ற இயக்கத்துக் குண்டர் படை கொலைகாரனும் அவன் சகாக்களும் ரூபனை மறித்து, 'உன்னைத் தான் தேடிக்கொண்டிருந்தோம்; வசமாக வந்து மாட்டினாய்' என்று கூறியபடி இரும்புக்கம்பிகளால் மிருகத்தனமாகத் தாக்கி அவரை நினைவிழக்கச் செய்துள்ளனர். உடனடியாகவே தங்களது வானில் ஏற்றிக் கரை நோக்கிச் சென்றுள்ளனர். இதன்பின் ரூபன் வீடு திரும்பவில்லை. ரூபனுடன் சேர்ந்து சென்றவர் வேதாரண்யம் போலீசாரிடம் இது பற்றி முறையீடு செய்தபோது அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் அவர் தொலைபேசிமூலம் ரூபனிருந்து வந்த ஆச்சிரமத்து சுவாமிக்குத் தகவல் தெரிவித்தார். தபால் நிலையத்திலிருந்து வெளியே வரும் பொழுது, புலிகள் அவரையும் கைது செய்து தமது காவலில் வைத்துள்ளனர். நான்கு மணி நேரத்தின் பின் பொட்டு அங்கு வந்து ரூபனைத் திருச்சிக்கு அனுப்பிவிட்டதாகக் கூறி அவரைப் போகச் சொன்னான். அவர் திருச்சி சென்று ஆச்சிரமத்தில் பார்த்தபொழுது ரூபன் அங்கில்லை. பின்னர் திருச்சியிலுள்ள புலிகளின் அலுவலகத்தில் சுவாமியாரும்; அந்நண்பரும் புகார் செய்தபோது, திவாகர் என்ற புலிகளின் திருச்சிக்கிளை பொறுப்பாளர் மிரட்டுகின்ற தொனியில் பேசி, இதனை வெளியே கூறினால் உங்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனச் சொல்லி யுள்ளார்.

இன்று, சிங்கள இனவெறி அரசின் கொடிய இனப்படுகொலைக்கு ஆளாகிப் பரிதவிக்கும் தமிழ்மக்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில முடிவுகளை எடுக்க வேண்டியதொரு நெருக்கடியான திருப்புமுனையில் நிற்கின்றனர். காரணம் – தமிழ் மக்களின் விமோசனத்துக்காகப் போராட வந்த விடுதலை இயக்கங்கள் எனப் பறைசாற்றிக் கொள்ளும் பெரிய இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தையே கேலிக்கூத்தாக்கும் தமது பாசிச நடவடிக்கைகளை இன்னும் தொடர்கின்றன. எமது தோழர்கள் தமது சொந்த இயக்கத் தலைமைகளினாலேயே அவர்கள் கூறும் 'விடுதலை'யின் பேரால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இப்பெரிய இயக்கங்களின் பாசறைகள். சித்திரவதை முகாம்களாகவும், கொலைக்களங்களாகவும் மாறி வருகின்றன. சிங்கள இனவெறி இராணுவம் கொன்று குவித்த தமிழர்களின் எண்ணிக்கையைக் கணக்குப் பார்த்துப், படம் பிடித்து, புத்தகம் அடித்து, விளம்பரம் தேடிப். பணம் பண்ணும் இந்தக் கும்பல்களின் திரைகளுக்குப் பின்னால், நியாயம் கேட்ட பல போராளிகளின் சடலங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. இன்று, தமிழீழ விடுதலைப் போராட்டமானது பாசிச வெறி பிடித்த இவ்வியக்கத் தலைமைகளுக்கு வேண்டாத நேர்மையான பல போராளிகளின் இரத்தத்தால் எழுதப்படும் கறைபடிந்த துயர வரலாறாக திசைமாறிவருகிறது.

## ஐக்கியமா? சந்தர்ப்பவாதக் கூட்டா?

உண்மையான விடுதலைப் பற்றும், தீர்க்கதரிசனமும், அரசியல் விவேகமும் உடைய ஓர் இயக்கத் தலைமை, பரந்துபட்ட மக்கள் கூட்டத்தை விடுதலையை நோக்கி அணிதிரட்டுவதே இக்காலகட்டத்தின் முக்கிய தேவை என்பதை உணர்ந்து கொள்ளும். இதற்கு முதற்படியாக, விடுதலையை நேசிக்கும் தனிமனிதர்கள், குழுக்கள், வெகுசன அமைப்புக்கள் அனைவருக்கும் விடுதலைப் போராட்டத்தின் வெவ்வேறு மட்டங்களில் பங்களிக்க உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளல் அவசியம். அடுத்து, இத்தகைய சக்திகளெல்லாவற்றையும் ஒருங்கே கொணர்ந்து பலம் பொருந்திய வெகுசன இயக்கத்தைக் கட்டியெழுப்புவது போராட்டம் வெற்றிபெற இன்றியமையாதது என்பதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் இவற்றை உணர்ந்ததோடல்லாமல் விசுவாசத்துடன் நடைமுறைப்படுத்த உழைக்கும் இயக்கமும் அதன் தலைமையுமே ஈற்றில் நாடளாவிய தேசிய விடுதலை இயக்கமொன்றிற்குத் தலைமை தாங்கி, போராட்டத்தை வழிநடத்தி, முன்னெடுத்துச் செல்லும் தகைமை பெறும்.

www.tamilarangam.net

புலிகளின் தலைமையின் கொலை நடவடிக்கைகள் இத்தகையதொரு வெகுசன இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஊறுவிளைவிப்பதாகவேயமையும். சகபோராளிகளையும், மாற்று இயக்கத் தோழர்களையும் கொன்றொழிப்பது இயக்கங்களினுள்ளும், இயக்கங்களிலிடையேயும் மக்கள் மத்தியிலும் பிளவுகள், பூசல்களைத் தோற்றுவிக்கும். மக்களுக்குப் போராட்டத்தில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும், பல போராளிகளும் அவர்களைத் தொடர்ந்து வெகுசனப்பிரிவுகளும் போராட்டத்தில் விரக்தியுற்று விலகநேரிடும்.

நீண்டகாலமாகவே சகபோராளிகளைக் கொன்றொழிக்கும் பாரம்பரியம் படைத்த விடுதலைப் புலிகளின் தலைமையும் அதன் அடியாட்களும் நெருக்கடியான இக்காலகட்டத்தில் கூட இவ்வுண்மைகளை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மாறாகப் போராட்டத்தையே பின்னடையச் செய்யக்கூடிய தமது அழிவு நடவடிக்கைகளை இன்னும் தொடர்கின்றனர்.

**எதிரியுடன் கூட சமரசம் பேசவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளான விடுதலைப்புலிகளின் தலைமை, எதிரியுடன் விருந்துண்டு, அதற்குக் காட்டிய பெருந்தன்மையில் ஒரு சிறிதளவேனும் தனதியக்கத்திலிருந்து விலகிய ஆனால் பொது இலட்சியத்துக்குத் தன்னை அர்ப்பணித்த சகவிடுதலைப்போராளிக்குக் காட்ட முடியாது போனது - வேதனைக்குரியது. இவர்கள் ‘ஒற்றுமை’ பற்றியும் ‘விடுதலை’ பற்றியும் போடும் கோஷங்கள் போலியானவை என்பது இதிலிருந்து எம்க்குத் தெளிவாகின்றது.**

இவர்களுடன் கூட்டுச்சேர்ந்துள்ள மற்ற இயக்கங்களும் இக்கொலைகளைக் கண்டிக்காமல் மௌனமாயிருப்பதிலிருந்து, இவர்கள் தமது தவறுகளை நியாயப் படுத்தவும், கொலைகளைச் செய்துவிட்டு தாம் செய்யவில்லை என்று அறிக்கை விடவுமே ஐக்கியப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையாகிறது. இந்த ஐக்கியம், தலைமைகள் ஈடாடத்தொடங்கும் பொழுது மக்களைத் திசைதிருப்புவதற்காகவும் அமைப்பிலுள்ளவர்களைத் திருப்திப்படுத்தவும் ஆடப்படும் நாடகமேயன்றி விடுதலையை முதன்மைப்படுத்தும் நடவடிக்கையல்ல என்பதும் நன்குபுலனாகிறது.

## விமர்சனங்களுக்கு அஞ்சும் கோழைத் தலைமைகள்

விமர்சனம் இன்றிப் புரட்சிகர சிந்தனையிலோ அதை நடைமுறைப்படுத்துவதிலோ வளர்ச்சியில்லை. இயக்கத்தினுள்ளே தனது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட ஒவ்வொரு தோழனுக்கும் உரிமை இருப்பதுதான் புரட்சிகர மரபு. இயக்கத் தலைமையின் தவறுகளைச் சுட்டிகாட்டுவதும் விமர்சிப்பதும் ஒவ்வொரு போராளியினதும் கடமையும் கூட. விடுதலைப் போருக்கு வந்தவர்கள் கூலிக்காக ஆயுதம்ஏந்தி கொலை செய்ய வந்தவர்களல்ல. போராளிகள் ஒவ்வொருவரும் போராட்டத்தின் அரசியல் - இராணுவம் ஆகிய இரு பரிமாணங்களிலும் முழுமையான பங்களிப்பைச் செய்வதே போராட்டம் சரியான திசையில் செல்வதை உறுதிப்படுத்தும்.

புரட்சிகர ஆயுத வன்முறையானது தேசத்தின் அல்லது வர்க்கத்தின் எதிரியை வீழ்த்தப் பிரயோகிக்கப்பட வேண்டியதொன்றாகும். விடுதலைப்புலிகளின் தலைமையோ தன்னை விமர்சிக்கின்ற சொந்த இயக்கத்தோழர்களுக்கும் சகபோராளிகளுக்குமெதிராயல்லவா தன் ஆயுதத்தைத் திருப்புகின்றது. **பாசிசவெறிகொண்ட தலைமைகளே விமர்சனங்களுக்குக் கொலைகளைப் பதிலாக வைக்கின்றனர்.**

மேலும் இத்தலைமை விமர்சனங்களை அரசியல் தளத்தில் எதிர்கொள்ள அஞ்சி, எங்கே தன் ஆதிக்கம் நிலைகுலைந்து போகுமோ என்ற பயத்தில் போராளிகள் மேல் தனது உளவுப் படை, குண்டர் படைகள் மூலம் தன் சர்வாதிகாரப் பிடியை இறுக்குகின்றது. விடுதலைப் புலிகளின் தலைமை புரியும் கொலைகள், விமர்சனத்தைக் கண்டு அஞ்சி நடுங்கும் அதன் மனக்கோளாறு, ஆகியவற்றிலிருந்து வெளிப்படையாவதென்ன? போராட்டம் பற்றிய கோட்பாடு, யுத்ததந்திரம் ஆகியவை தொடர்பான சரியானதொரு அரசியல் - இராணுவக் கண்ணோட்டத்தை வளர்த்தெடுக்க முடியாத அதன் இயலாமை, பற்றாக்குறை, அரசியல் வங்குரோத்து, கோழைத்தனம் ஆகியவையே இவர்களை இப்பாசிச நடவடிக்கைகளிலீடுபடத் தூண்டுகின்றன என்பது எமக்குத் தெளிவாகின்றது. இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து, இத்தலைமையின் குறிக்கோள் உண்மையிலேயே தமிழ் மக்களின் விடுதலை தானா என்று, கேட்கவைக்கின்றது. ஆரோக்கியமான சக்திகளை அந்நியப்படுத்தி, அவற்றைக் கொன்றொழிப்பது எம்மை விடுதலையை நோக்கி இட்டுச் செல்லுமா? போராட்டத்தை முன்னெடுக்கச் சரியான கோட்பாடு, யுத்ததந்திரத்தை வகுத்து, அதனை நடைமுறைப்படுத்தவே தலைமை என்ற நிலைமாறி, தலைமையின் இருப்புக்காகவே இயக்கமும், அதற்கிசைவாகக் கொள்கையும் பிரச்சார நியாயப்படுத்தல்களுமெனத் தலைகீழாக நிற்கிறது விடுதலைப்புலிகளியக்கம். ஒரு சில தனிநபர்களினதும், அவர்களைச் சூழவிருக்கும் அடியாட்கும்பலினதும் புகழ், அந்தஸ்து, நலனுக்காகவும், அதிகாரத்தைத் தம்வசம் மாத்திரமே வைத்திருப்பதற்காகவும் நிலைகுலைந்து போன தமது ஆளுமைகளை பலவந்தமாகப் போராளிகள் மேல் திணித்து ஸ்திரப் படுத்திக் கொள்வதற்காகவும், தனிப்பட்ட பகைமைகளைத் தீர்த்துக் கட்டுவதற்காகவும் இன்று இவர்கள் போராட்டத்தையே திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையதொரு போரில் எத்தனையோ தீரமான இளைஞர்கள் எதிரியின் கையிலும் இக்கொலைகாரக் கும்பல்களின் கையிலும் அகப்பட்டுப் பலிக்கடாக்களாகின்றனர் என்பது எமக்கு மனச்சஞ்சலத்தை ஏற்படுத்துகின்றது.

## போராளிகளே !

சிங்கள இனவெறி அரசின் ஒடுக்குமுறைக்கு நீண்ட காலமாகப் பலியாகிக் கொண்டிருந்த தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடமுன்வந்துள்ளீர்கள். ஒரு சுதந்திர, சோஷலிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயத்தைத் தமிழீழ மண்ணில் அமைப்பதன் மூலமே தமிழ் மக்களுக்கு உண்மையான விமோசனம் உண்டு என்று கூறி, அதை அடைய தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தீர்கள். இன்று உங்கள் இயக்கத்தலைமைகள் தமிழ் மக்களின் முழுமையான விடுதலைக்கு இட்டுச் செல்லும் தகைமை உடையவை என்பதை நம்புகிறீர்களா? தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் விடுதலை வேட்கையுடனும், மக்கள்பால் அன்புடனும், தீரமாகப் போராடி களத்தில் மடிந்தனர். இப்போராளிகளின் தியாகங்கள் பலவற்றாலே தமிழீழ மண்ணில் ஆயுதப்போராட்டம் புதிய பரிமாணமெடுத்தது. இன்றும் விடுதலைப்புலிகளியக்கத் தோழர்கள் பலர் கடும் உழைப்புடனும், அர்ப்பணிப்புடனும் களத்தில் போராடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இப்போராளிகளின் பங்களிப்புகள், தியாகங்கள் தலைமையின் பாசிச நடவடிக்கைகளினால் அர்த்தமற்றுப் போய்விடும் நிலைமை உருவாகிக்கொண்டுவருகின்றது. ஒரு சர்வாதிகாரத் தலைமையினதும் அதன் அடியாட்களினதும் ஆதிக்கத்தை, நலனை பாதுகாப்பதற்காகவும் அவர்களது விளம்பரத்துக்காகவுமே இவ்வீரமிக்க இளைஞர்களின் வாழ்வுகள் உரமாகிப்போகவில்லையா? **இயக்கத்தின் ஒட்டுமொத்தமான நடவடிக்கைகள், போக்குகளை நிர்ணயிப்பதில் இப்போராளிகளின் பங்கென்ன?** வெளியே பிரச்சாரப் பகட்டுக்காக மாத்திரம் மத்தியக்குழு, அரசியற்குழு, என்றெல்லாம் கூறிவிட்டு, நடைமுறையில் உட்கட்சி ஜனநாயகத்தை வேரோடு அழித்து, தனது குண்டர் படை, உளவுப்படையின் உதவியுடன் இயக்கத் தலைமை போராளிகளை அடக்கி ஒடுக்குகிறது. 'இராணுவக்கட்டுப்பாடு' என்ற போர்வையில் அடிமட்டப் போராளிகளுக்கு எதுவுமே தெரியாமல் தனது ஊழலை மறைக்கின்றது; விஷயம் தெரிந்து கேள்வி கேட்போரை ஒதுக்கி விரட்டுகின்றது அல்லது சித்திரவதை செய்து கொலை செய்கின்றது; மனித விரோதிகளான தனது அடியாட்களுக்கு மாத்திரம் சலுகைகளையும் அதிகாரத்தையும் வழங்குகின்றது.

இத்தகைய தலைமையின் பாசிச நடவடிக்கைகள் உருவாக்கிய நச்சுச்சூழலில் தோழர்கள் மத்தியில் ஒத்துழைப்பும் பரஸ்பரநம்பிக்கையும் தோழமையுணர்வும் வளர்வது சாத்தியமில்லை. மாறாக சந்தேகம், பயம், பிரிவினை ஆகியவை தான் பெருகும். தோழர்கள் நட்புடன் பேசமுடியாது ஒவ்வொருவரையும் சந்தேகக் கண்ணுடனும் மனக்கசப்புடனும் நோக்கும் துர்ப்பாக்கிய நிலையே இயக்கத்தினுள்ளே இன்று ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து சகபோராளிகள் கொலைசெய்யப்படும் பொழுது இதைப்பார்த்து நிற்கும் மற்றையபோராளிகள் மனம் குமுறலாம். அதேசமயம் பிரச்சினைகள் புரியாத, அரசியற்பக்குவம் அடையாத பல இளம்போராளிகளின் மனித உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டு, அவர்கள் தலைமைக்குச் சாதகமான பகடைகளாக, கொலையாளிகளாக மாறலாம். இன்று இயக்கம் கொலையாளிகள், கொலையுண்ணப்படுபவர்கள் என இரு சாராரை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது.

**மனிதநேயமின்றி, அரசியற் பக்குவமின்றி, தமது புரட்சிகரக் கடமைபற்றிய புரிந்துணர்வின்றி வெறுமனே ஆயுதந்தாங்கி தலைமையின் கட்டளைக்குக் கீழ்படிந்து குறிபார்த்துச்சுடும் போராளிக்கும் சிங்கள இராணுவவீரனுக்கும் கூலிப்படையினனுக்கும் என்ன வேறுபாடு?** இத்தகையவர்கள் மனித மேம்பாடுடைய புதிய சமுதாயத்தை உருவாக்க தகுதியுடையவர்கள் தானா?

எல்லாவற்றுக்கும் மேலாக, போராளிகளுக்காக தம்மையும் ஒறுத்து, ஆதரவும் தந்து, அவர்களையே நம்பிவாழும் தமிழ்மக்களிடமிருந்து இயக்கத்தின் உண்மை நிலையை எவ்வளவு காலம் மறைத்து வைப்பீர்கள்? நீங்கள் மௌனஞ் சாதிப்பது ஊழல் நிறைந்த உங்கள் தலைமையுடன் சமரசஞ் செய்து அதன் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு அனுசரணையாக இருப்பதற்குச் சமமாகும். இயக்கத்திலிருக்கும் பல உண்மைப்போராளிகளைப் போலவே தமிழ்மக்களும் பல தியாகங்களைச் செய்துள்ளார்கள். எண்ணிறந்தவர்கள் பலியாகிவிட்டார்கள். இனி இழப்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. இனியும் நீங்கள் உங்கள்தலைமையைப் பேணிப்பாதுகாப்பது, யாருக்காக நீங்கள் போராடவந்தீர்களோ, அவர்களுக்கே நீங்கள் இழைக்கும் மிகப்பெரிய துரோகமாகும்.

## தமிழ் மக்களே!

அமைதியையும் சமாதானத்தையும் நேசித்த நீங்கள் சிங்கள பேரினவாதத்தின் கொடுமையைத் தாங்கமுடியாமல் போர்க்குணம் கொண்டு கிளர்ந்தெழுந்தீர்கள். பல உயிர்கள் பலியாகின. உடமைகள் பறிக்கப்பட்டன. இழப்பதற்கு எதுவுமின்றி இன்று தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறுவழியின்றி நிற்கிறீர்கள். ஆனால் உங்களுக்காகப் போராட முன்வந்துள்ளதாகக் கூறிக் கொள்ளும் இயக்கங்களின் பாசிச போக்கும், அராஜக நடவடிக்கைகளும் உங்களை விடுதலைக்கு இட்டுச்செல்லுமா? இவ்வியக்கங்களுக்கு நீங்கள் பொருளுதவியும் உடலுதவியும் தந்தீர்கள்; பாதுகாப்பும் ஆதரவும் கொடுத்தீர்கள்; உங்கள் பிள்ளைகளைப் போராட்டத்திற்கென அர்ப்பணித்தீர்கள். உங்களாதரவு இன்றி இவ்வியக்கங்கள் ஈழமண்ணில் நடமாடவே முடியாது. போராட்டத்திற்கான உங்கள் பங்களிப்பினால் இவ்வியக்கங்களின் தலைமைகளை விட அதிகமாக, எதிரியின் கையில் அழிவையும், அவமானத்தையும் அனுபவித்தீர்கள். ஆகவே இவ்வியக்கத்தலைமைகளின் அராஜகப்போக்கைத் தட்டிக்கேட்க உங்களைவிட வேறுயாருக்கு உரிமை இருக்கின்றது? சில வெற்றிகரமான தாக்குதல்கள் மட்டும் விடுதலைப் போராட்டமாகி விடாது; அவற்றை மேற்கொள்ளும் இயக்கமும் விடுதலை இயக்கமாகிவிடாது. அப்படி நீங்கள் தாக்குதல்களை மட்டும் ரசிக்க விரும்பினால் அந்நிய நாடுகளில் உள்ள கூலிப்படையினர் இவர்களைவிட நுட்பமான, வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்த வல்லவர்கள். பணம் கொடுத்தால்மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதும். ஆனால், இது உங்களை ஒடுக்கு முறையிலிருந்து விடுவிப்பதற்காக நீங்கள் நடத்தும் போராட்டம். உங்களது நலன்களைப் பிரதிபலிக்கும் தலைமைகளே இப்போராட்டத்தை முன்னெடுக்கும் தகுதி கொண்டவை. எதிரியின் கொடுமையான கொலைக்கரங்களிலிருந்து தப்புவதற்காக அதே தன்மையைக் கொண்ட தலைமைகளுக்குப் பலியாகவும், மீண்டும் அந்த ஒடுக்குமுறைக்குள்ளாகவும் போகிறீர்களா?

உங்களுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு, உங்கள் பணத்தில் வாழ்ந்து கொண்டு உங்கள் பிள்ளைகளையே கொலை செய்துவரும் இந்தத் தலைமைகளை நீங்கள் கண்டிக்க மறந்தால் ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து கடைசியில் உங்களையும் கடிக்க நீங்கள் அனுமதி கொடுக்கிறீர்கள் என்பதே பொருள். நீங்கள் பார்வையாளர்களாக மட்டும் இருப்பது எத்தனை நாளுக்கு? உங்களுடைய அலட்சியப் போக்கால் நேற்று இவர்கள் போராளிகளைக் கொலை செய்து காரணங்காட்டினார்கள். இன்று கொலைகளைச் செய்துவிட்டு மூடி மறைத்து மௌனஞ் சாதிக்கிறார்கள். கேட்டால் 'நாங்கள் செய்யவில்லை' என்கிறார்கள். நாளை 'இப்படித்தான் செய்வோம். நீங்கள் யார் கேட்பது?' என்பார்கள். பின்பும் கேட்டால் உங்களையும் கொல்வார்கள். இதனை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?

இயக்கத் தலைமைகளின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டு மனம் குமுறும் பல இளம் போராளிகள் ஒவ்வோர் இயக்கத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் மௌனஞ் சாதிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். காரணம், சொற்பளவு ஜனநாயகத்தன்மை கூட இல்லாத இவ்வியக்கங்களினுள்ளே இப்போராளிகளின் உயிருக்குக் கூட உத்தரவாதமில்லை. ஒத்த கருத்துடைய மற்றத் தோழருடன் கலந்துரையாடி தலைமையை விமர்சிக்கவோ, தட்டிக் கேட்கவோ சுதந்திரமெதுவுமில்லை. இந்த நேர்மையான போராளிகளைப் பாதுகாப்பதுவும் அவர்கள் கேட்க வேண்டிய கேள்விகளை இத்தலைமைகளிடம் கேட்க வேண்டியதும் உங்கள் கடமையாகும். போராளிகளைக் கொலைசெய்துவிட்டு தலைமைகள் காட்டும் காரணங்களை நம்பிவிடாதீர்கள். கொலையுண்ட போராளியின் நடவடிக்கைகளுக்கு மாசு கற்பித்து, அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது இத்தகைய இயக்கங்களின் மரபு. எதையும் தீர விசாரியுங்கள்.

உங்கள் பேரில் தம்முயிரை அர்ப்பணித்துப் போராட வந்திருக்கும் பல நேர்மையான இளைஞர்களின் போராட்ட வாழ்வுக்கும் தொடர்ந்த பணிக்கும் நீங்களே இன்று உத்தரவாதமளிக்க முடியும். நீங்களே விடுதலைப்பாதையை நிர்ணயிக்கும் ஒரு காலகட்டத்தை அடைந்துள்ளீர்கள். சிந்தியுங்கள். நாளைய பொழுது, உங்கள் கையில்!

**விடுதலைப் போராளிகளே! தமிழீழ மக்களே!**

ரூபன் செய்த குற்றந்தான் என்ன?

போராளிகளை அரசாங்கத்திற்கு காட்டிக் கொடுத்தானா?

எதிரிப் படையின் உளவாளியாக இயக்கத்திற்கு வந்தானா?

தனது வாழ்வை வளம்படுத்த இயக்கச் சொத்தைக் கொள்ளையடித்தானா?

இல்லை.

அவன் மக்களை நேசித்தான்.

இயக்கத்தின் தவறான போக்குகளால் விடுதலைப் பாதை வழி மாறக் கூடாது எனச் சிந்தித்தான்.

தனக்குத் தவறென்று பட்டதை மறைக்காமல், சூழ்ச்சி செய்யாமல் தலைமையிடம் எடுத்துரைத்தான். போராளிகள் கொல்லப்படுவதற்குக் காரணம் கேட்டான்.

சர்வாதிகாரத்தனமாக தலைமை செல்வதைச் சுட்டிக் காட்டினான்.

மக்களுக்காகப் போராடுகிறோம் என்று கூறிக் கொண்டு மாற்று இயக்கங்களுடன் மோதலை ஏற்படுத்துவதை கண்டித்தான்.

இயக்கத்துள் உட்கட்சி ஜனநாயகத்தையும் அதிகாரப் பரவலாக்கத்தையும் வற்புறுத்தினான்.

தனக்கு இடப்பட்ட பணிகளை என்றாவது அவன் தட்டிக் கழித்தானா?

போராட மாட்டேன் என்று சொன்னானா? அல்லது அமைப்பிலிருந்து கொண்டே இயக்கத்தின் தவறுகளை வெளியே விமர்சித்துத் திரிந்தானா?

**மக்களின் உண்மையான விடுதலையை விரும்பிப் போராட வந்த ரூபனுக்கு புலிகளின் பரிசு — சித்திரவதைக்குப் பின் மரணதண்டனை.**

## போராளிகள் உரிமைக் காப்பு இயக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்